பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 11 வியாழக்கிழமை 29.09.2022 கதிர் 215

## மஹிந்த வீட்டில் நவராத்திரி பூஜை

### சுப்பிரமணியன் சுவாமியும் பங்கேற்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நவராத்திரிப் பூஜை சிறப்பு வழிபாடு நேற்றிரவு ☞2



# தீர்வுக்கான பேச்சு விரைவில் ஆரம்பம்

### பிரதமர் தினேஷ் அறிவிப்பு

தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு விரைவில் பேச்சை ஆரம்பிக்கும் - என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைகள் தொடர ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று தெரிவித்த தினேஷ் குணவர்த்தன, குறுகிய காலத்துக்குள் இந்தப் பிரச்சினைகளுக்குள் உரிய தீர்வுகளைக் காண வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய பிரச்சினைகள் நீடித்தால் இன, மத நல்லிணக்கம் ஏற்படாது. நாட்டில் ஏதோவொரு வகையில் இன ரீதியிலும், மத ரீதியிலும் கருத்து மோதல்கள் உருவாகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடத்தில் பிளவுகளை ஏற்படுத்திக் குளிர்காய சிலர் முற்படுகின்றனர்.

தீர்வு விடயம் தொடர்பில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் அரசாங்கம் விரைவில் பேச்சை ஆரம்பிக்கவுள்ளது - என்றார்.



### ஒக்டோபர் 6, 7 இல்

## 22 ஐ விவாதத்துக்கு எடுக்கத் தீர்மானம்

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலம் மீது நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் விவாதம் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக் கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று முற்பகல் நடைபெற்றது.

இதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

# எங்கள் ஆட்சியில்தான் தமிழ் மக்களுக்குத் தீர்வு

### தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார தெரிவிப்பு




நினைவேந்தலுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது அடிப்படை மனித உரிமை மீறலாகும். வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தமிழ் மக்கள் அமைதியாகவே நடத்துகின்றனர். அடிப்படை அரசியல் அறிவு அற்றவர்களே இதற்கு எதிராகக் கண்டனங்களை வெளியிடுகின்றனர். தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் தமிழர்களுக்கான உரிமைகளையும், தீர்வுகளையும் வழங்கியே தீரும். ☞2

## விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த றொபேட் அன்ரன் ஜினுசன் (வயது 21) என்ற இளைஞரே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று ☞2

## கோட்டாவைச் சந்தித்த சுப்பிரமணியன் சுவாமி



இந்திய பாரதிய ஜனதா கட்சியின் மூத்த அரசியல்வாதி சுப்பிரமணியன் சுவாமி, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியுள்ளார். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ ☞2

## அம்பாறையில் நடைபெற்ற கையெழுத்துப் போராட்டம்



பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான கையெழுத்துப் போராட்டம் கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ☞2

## 23 கைபேசிகளுடன் சிக்கிய இளைஞர்!

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தொடர் கைபேசித் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் யாழ். பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் நாவற்குழியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என்றும், அவரிடம் இருந்து 23 ☞2

## ரணில் அரசு விரைவில் கவிழும்

### அடித்துக் கூறுகின்றார் மைத்திரி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் ஆயுள் விரைவில் முடிவடையபோகின்றது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசுக்கு மக்கள் ஆதரவு இல்லை. ☞2

## யாழில் ஹெரோய்னுக்கு அடிமையானவர்கள் தாங்களாவே சிகிச்சைக்கு வருவது அதிகரிப்பு

யாழ்ப்பாணத்தில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்ன் போன்ற போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் தாங்களாக சிகிச்சைக்கு முன்வருவது கடந்த அண்மைய நாள்களாக அதிகரித்துள்ளது. அவர்களுக்கான புனர்வாழ்வு விடுதி வசதிகள் யாழ்ப்பாணம் மாவட்ட மருத்துவமனைகளில் இல்லாத ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## எங்கள்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தமிழினத்தால் 'தியாக தீபம்' என்று போற்றப்படும் திலீபனை வடக்கு, கிழக்கில் பகிரங்கமாக நினைவேந்தியவர்களை உடனடியாகச் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு போரிலோ அல்லது வேறு எந்தச் சந்தர்ப்பத்திலோ உயிரிழந்தவர்களை அவர்களின் உறவுகள் அல்லது அவர்களின் இனத்தவர்கள் அமைதியாக நினைவேந்த முடியும். இதற்கு எதிராக எவரும் கருத்துக்களை வெளியிட முடியாது.

தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையைப் பறித்துவிட்டு நாட்டில் எப்படி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்? மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரச தரப்பினரும் அதன் நேர்வழி, மறைவழி பங்காளிகளும் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தியே வந்தார்கள்.

தமிழ் மக்களுக்கான உரிமைகளையும், தீர்வுகளையும் வழங்க எந்த அரசும் முன்வரவில்லை. இந்த நாட்டில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் தமிழர்களுக்கான உரிமைகளையும், தீர்வுகளையும் வழங்கியே தீரும் - என்றார்.

## 3 கைபேசி..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இவை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் திருடப்பட்டவை என்று கூறப்படுகின்றது.

சந்தேகநபர் மருத்துவமனை விடுதியில் தங்கியுள்ளவர்கள் மற்றும் மருத்துவமனைக்குச் வருவோரிடம் இருந்து கைபேசிகளைத் திருடுவதை வழக்கமாகக் கொண்டவர் என்று கூறப்படுகின்றது.

பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

மருத்துவமனையில் கைபேசிகளைப் பறிகொடுத்தவர்கள், தங்கள் கைபேசிகளை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ரணில் அரசு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் ஆயுள் விரைவில் முடியப் போகின்றது. தேர்தல் ஒன்றின் ஊடாகவே ஆயுள் முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

தற்போதைய அரசுக்கு நிலையான பயணம் இல்லை என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதே வழியில் பயணித்தால் தேசிய உற்பத்தி முழுமையாக இல்லாமல் போகும். போராட்டம் வேறு வடிவில் வெடிக்கும். மாணவர்கள் கூட வீதிக்கு இறங்குவார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசியப் பேரவையில் அங்கம் வகிக்காது - என்றார்.

## அம்பாறையில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி, மத்திய முகாம் 3 இல் அமைந்துள்ள ஆலய முன்றலில் மக்களின் பேராதரவுடன் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், தவராசா கலையரசன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் உள்ளிட்ட அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக்கட்சியின்வாலிபர்முன்னணியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், அவர்களுக்கு உளவள ஆலோசனைகளும், மருத்துவ வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன என்று மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்ன் பாவனையும், ஏனைய போதைப்பொருள்களின் பாவனையும் வெகுவாக அதிகரித்துள்ளன.

ஹெரோய்ன் போதைப்பொருள் பாவனையால் இளைஞர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், சமூகப் பிறழ்வான சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

இந்தநிலையில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் தாமாகசிகிச்சைக்குமுன்வருவதுஅண்மைய நாள்களாக அதிகரித்துள்ளது என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனைக்கு உள்ளானவர்களைத் தங்க வைத்து சிகிச்சையளிக்கக்கூடிய வசதிகள் மருத்துவமனைகளில் இல்லை. சாவகச்சேரி மருத்துவமனையில் மதுப் பாவனைக்கு அடிமையானவர்களைத் தங்க வைத்துச் சிகிச்சையளிக்கக்கூடிய வசதிகள் உள்ளபோதும், ஹெரோய்ன் போன்ற போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்களைத் தங்க வைத்துச் சிகிச்சையளிக்கக் கூடிய விடுதி வசதிகள் இல்லை.

கந்தகாடு, வெலிகந்தை போன்ற போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு முகாம்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழேயேசெயற்படுகின்றன. அவ்வாறான புனர்வாழ்வுமுகாம்களும்யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இல்லை. இதனால், தற்போது சிகிச்சைக்குவரும்ஹெரோய்ன் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு உளநல ஆலோசனைகளும், மருத்துவ வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு , வீடுகளுக்கு அனுப் பப்படுகின்றனர். உளநல ஆலோசனைகள் தனியாக, குழுவாக, குடும்ப உறுப்பினர்கள் எனப் பல்வேறு வழிமுறைகளில் பல்வேறு கட்டங்களாக வழங்கப்படுகின்றன என்று மருத்துவ வட்டாரங்கள் தெரி வித்தன. போதைப்பொருள் பாவனைக்கு அடி மையானவர்கள் தாங்களாக சிகிச்சை பெற முன்வரும் நிலையில், அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கக்கூடிய நிலையம் ஒன்றை உருவாக்குவது கூடிய பயனைத் தரும் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது

## மஹிந்த..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. இந்தச் சிறப்பு வழிபாட்டில், இந்திய அமைச்சரவை முன்னாள் அமைச்சரும் இராஜ்யசபாவின் முன்னாள் உறுப்பினருமான கலாநிதி சுப்பிரமணியன் சுவாமி சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார்.

## கோட்டாவை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

இல்லத்தில் நேற்று நடைபெற்ற நவராத்திரி விழாவில் பிரதம அதிதியாக சுப்பிரமணியன் சுவாமி கலந்துகொண்டார்.

இதன்போது அங்கு வந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

## விபத்தில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தார். இந்த விபத்து, கடந்த 21ஆம் திகதி கோப்பாய் சந்தியில் நடந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பின் இருக்கையில் அமர்ந்து இவர் பயணித்த மோட்டார் சைக்கிளைப் பின்புறமாக வந்த இன்னொரு மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

இதனால் வீதியோர வாய்க்காலுக்குள் தூக்கி வீசப்பட்டு இவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இவர் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விமலின் சீற்றம் ஏன்?

“மரணித்த புலிப் பயங்கரவாதியான திலீபனை வடக்கு, கிழக்கில் பகிரங்கமாக நினைவேந்தியவர்களை உடனடியாகச் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும்”.

– இவ்வாறு அரசிடம் வலியுறுத்தியுள்ளார் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ.

“தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்த நாட்டில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு ஆகும். இந்த அமைப்பில் இருந்து மரணித்தவர்களை யாராவது பகிரங்கமாகநினைவுகூர்ந்தால்அவர்களைப்பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்.

“மரணித்த புலிப் பயங்கரவாதியான திலீபனை வடக்கு – கிழக்கில் 12 நாள்கள் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவேந்தியுள்ளார்கள். திலீபனின் படத்தைத் தாங்கிய ஊர்திப் பவனிகளும் வீதிகளில் வலம் வந்துள்ளன.

“சிங்கள மக்களைச் சினமூட்டும் வகையில் தமிழ் மக் களும், தமிழ் அரசியவாதிகளும் நடந்துகொண்டுள்ளார்கள்.” – என்று தெரிவித்திருக்கிறார் அவர்.

தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் மனச்சிந்தனை – மூளை மையம் – எப்படி இயங்குகின்றது என்பதற்கு ஒரு குறியீடுதான் விமல் வீரவன்ஸ.

திலீபன் உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்த காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்பு அல்ல. அப்போது இந்தியப் படை இலங்கையில் இருந்தது. புலிகள் தரப்போடு இலங்கை அரசு இந்தியா ஊடாகப் பேச்சும் நடத்திக் கொண்டிருந்தது.

அத்தோடு திலீபன் ஆயுதப் போராட்டத்தில் வீர மரணம் அடைந்த போராளி அல்லன். அஹிம்சை மார்க்கத்தில் – காந்திய நெறியில் – தன்னை ஒறுத்தி – இந்தியாவையும் சிங்களத்தையும் சந்தி சிரிக்க வைத்த ஒரு காந்தியப் போராளி.

அத்தகைய தன் சோதரனை தமிழினம் அஞ்சலிப்பதை ‘பயங்கரவாதி’ முத்திரை குத்தித் தடுக்க முனைவதுதான் அப்பட்டமான முழுப் பேரினவாதம்.

இந்த நாட்டில் ஆயுதப் போராட்டம் நடத்தியமைக்காக பயங்கரவாதியாகச் சித்திரிக்கப்பட்டு, அதற்காக சிறையில் அடைக்கப்பட்டு பின்னர், மன்னித்து விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் பயங்கரவாதத்தை மோசமாக இழைத்த குற்றத்துக்காக கொல்லப்பட்டவர் றோஹண விஜயவீர.

முழுப் பயங்கரவாதியாக கொல்லப்பட்ட றோஹண விஜயவீரவையும் சகாக்களையும் விமல் வீரவன்ஸவும் அவரது தோழர்களும் கூட்டம் கூடி அஞ்சலிக்க முடியும் என்றால், அஹிம்சைப் போராளியாகவே, அகிம்சை வழியில் போராடித் தன்னுயிரைத் தானே தியாகம் செய்த திலீபனை அஞ்சலிப்பதை யாரும் தடுக்க முடியாது; தடுக்கவும் கூடாது.

உயிரிழந்தவர்களுக்கு மக்கள் விளக்கேற்றி அஞ்சலிப்பதைத் தடுக்கக்கூடாது, அது அவர்கள் உரிமை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே கூறி இருக்கிறார்

தடை செய்யப்பட்டதாக இலங்கை அரசு கூறும் புலிகள் இயக்கத்தின் நிகழ்வாக அது நடைபெற்றிருந்தாலாவது அது குறித்து வீரவன்ஸ துள்ளிக் குதிப்பதில் நியாயம் இருக்க முடியும். அப்படியும் அந்த நிகழ்வு எதுவும் நடைபெறவில்லை. அவ்வாறு இருக்கையில் விமல் வீரவன்ஸவுக்கு ஏன் இந்தச் சீற்றம்? இதை ஏன் சிங்களவர் களை சினமூட்டும் நிகழ்வாக அவர் குறிப்பிட வேண்டும்?

இந்தத் தீவில் தமிழ் மக்கள் தங்களின் அபிலாசைகளை – உரித்துக்களை – நிலை நிறுத்துவதை தாங்க முடியாமல் குமுறுகின்றது பௌத்த, சிங்களப் பேரினவாதம். அதன் ஒரு வடிவம்தான் விமலின் இந்தச் சீற்றம்.



## இளைஞர் மற்றும் யுவதிகளின் நலன் கருதி தொழில்சந்தை!

மனிதவலுவேலைவாய்ப்புதிணைக்களம் மற்றும் வவுனியா மாவட்டசெயலகம், பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்திய தொழிற் சந்தை நிகழ்வு வவுனியா மாவட்டசெயலக வளாகத்தில் நடைபெற்றது. மாவட்ட அரசஅதிபர் எ.சரத்சந்திர தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 15 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்துகொண்டதுடன். நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகளும், கலந்து கொண்டு பயன்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய உயர் ஸ்தானிகரைச் சந்தித்தார் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம்!



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை திங்கட்கிழமை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் சந்தித்து நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடியுள்ளதோடு, ஒலுவில் துறைமுகம் பாவனைக்கு உகந்தாக இல்லாத நிலையில், அதன் நுழைவாயில் பிரதேசத்தைச் சூழ மணல் மேடு குவிவதாலும், கடலரிப்பு காரணமாக அயல் கிராமங்களும் கூட பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன எனம், அலைத் தடுப்புச் சுவரின் தவறான நிர்மாணம் காரணமான சீர்கேடுகளால் ஏற்பட்டுள்ள விளைவுகளையும் அவரது கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் இந்தியாவின் நிதியுதவித் திட்டத்தின் கீழ், ஒலுவில் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் முன்வைத்த வேண்டுகோளையும் மிகவும் சாதகமாகப் பரிசீலிப்பதாகவும் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

இவை தொடர்பில் மீன்பிடித் துறை அமைச்சர், இந்திய உயர்ஸ்தானிகராலய வர்த்தக ஆலோசகர் ரகேஷ் பாண்டே, துறைமுக அதிகார சபை உயர் அதிகாரிகள் ஆகியோருடனான பேச்சு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிறை குறைந்த அதிகமான குழந்தைகள் ஓகஸ்ட்டில் அடையாளம் காணப்பட்டன!



ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளில், நிறை குறைந்த அதிகமான குழந்தைகள் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஊட்டச்சத்து விசேட வைத்தியர் கௌசல்யா கஸ்தூரிஆராச்சி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

கர்ப்பிணிகளின் உடல் நிறை குறியீட்டின் படி இந்த வருடத்தின் ஓகஸ்ட் மாதம் வரை 18.5 சதவீதத்துக்கு குறைவான தாய்மார்களுள் 15 சதவீதமானவர்கள் உரிய நிறைகுறியீட்டை பூரணப்படுத்த முடியாதவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

வியாழக்கிழமை 29.09.2022

# அடுத்தடுத்து வடகொரியா ஏவுகணைகளைப் பரிசோதனை கமலா ஹாரீஸின் தென்கொரிய பயண முஸ்தீபை அடுத்து



சியோல், செப்.29

தொடர்ச்சியாக ஏவுகணை சோதனைகளை நடத்தி வரும் வட கொரியா, நேற்று அடுத்தடுத்து இரண்டு ஏவுகணை சோதனை நடத்தியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வடகொரியாவின் பையோங்க் நகரில் சனான் என்ற இடத்தில் குறுகிய தூரம் சென்று இலக்கை தாக்கும் இரு ஏவுகணைகளை வட கொரியா ஏவி பரிசோதனை நடத்தியதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவின் இறுதி சடங்கில் பங்கேற்பதற்காக ஜப்பான் சென்றுள்ள அமெரிக்கா துணை அதிபர் கமலா ஹாரீஸ், இந்த வார இறுதியில் தென் கொரியாவுக்கு சுற்றுப்பயணம் மேற் கொள்ள உள்ளார்.

அப்போது, கொரியாக்களை பிரிக்கும் இராணுவ மயமாக்கப்பட்ட மண் டலத்தை பார்வையிட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதே நேரத்தில் கொரிய தீபகற்பத்தின் கிழக்கு கடற்கரையில் அமெரிக்க மற்றும் தென் கொரிய கடற்படை கப்பல்கள் கூட்டு பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்தச் செயற்பாடுகள் வடகொரியாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தி உள்ளன.

இந்நிலையில், கமலா ஹாரிஸ் தென்கொரியாவுக்கு வருவதற்கு முன், வடகொரியா தனது கிழக்கு கடற்பகுதியை நோக்கி பாலிஸ்டிக் ஏவுகணையை செலுத்தியதாக தென் கொரியா தெரிவித்துள்ளது. இந்த ஏவுகணை புதன்கிழமை ஏவப்பட்டதாக தென் கொரியாவின் கூட்டுப்படைத் தலைவர்கள் தெரிவித்து உள்ளதுடன், வடகொரியா இந்த வாரத்தில் ஏவப்பட்ட இரண்டாவது ஏவுகணை இதுவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உக்ரைன் பிராந்தியங்களை இணைக்கும் வாக்கெடுப்பு ரஷ்யாவுக்கு ஆதரவாக முடிவு

### நாளை உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடுவார் புடின்




கீவ், செப்.29

உக்ரைன் நாட்டின் மீது கடந்த 7 மாதங்களாக ரஷ்யா போர் நடத்தி வருகிறது. இந்த போரில் உக் ரைனின் பல்வேறு

மேலும் பல நகரங்களைக் கைப்பற்ற ரஷிய படைகள் தொடர்ந்து சண்டையிட்டு வருகின்றன. இந்த நிலையில் உக்ரைனில் ரஷ்யப் படைகள் வசம் உள்ள லுஹான்ஸ்க், டொனட்ஸ்க், கெர்சன் மற்றும் ஜாபோர்ஜியா ஆகிய நான்கு பிராந்தியங்களை தன் னுடன் இணைத்துக் கொள்ள ரஷ்யா முடிவு செய் துள்ளது.

இதுதொடர்பாக அந்த 4 பிராந்தியங்களை சேர்ந்த மக்களின் விருப்பத்தை தெரிந்து கொள்ள ரஷ்யா அங்கு பொதுவாக்கெடுப்பை நடத்தியது. கடந்த 23 ஆம் திகதி தொடங்கி நேற்று முன்தினம் 27 ஆம் திகதி வரை இந்த வாக்கெடுப்பு நடைபெற்றது. ரஷ்ய ஆக்கிரமிப்பு பகுதிகளில் நடைபெறும் இந்த வாக்கெடுப்பில் ரஷ்யாவுக்கு ஆதரவாகத்தான் முடிவுகள் வெளியாகும் என்று மேற்கத்திய நாடுகள் ஏற்கனவே குற்றம் சாட்டியிருந்தன. அதன்படியே இந்த பொதுவாக்கெடுப்பில் வெற்றி பெற்றுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

நான்கு பிராந்தியங்களிலும் பெரும்பாலான மக்கள் ரஷ்யாவுடன் இணைவதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர் எ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அந்த வகையில் ஜாபோர்ஜியா பிராந்தியத்தில் 93 சதவீதம் பேரும், கெர்சன் பிராந்தியத்தில் 87 சதவீதம் பேரும், லுஹான்ஸ்க் மற்றும் டொனட்ஸ்க் பிராந்தி யங்களில் முறையே 99 மற்றும் 98 சதவீதம் பேரும் ரஷ்யாவுடன் இணைய ஆதரவ தெரிவித்துள்ளதாக ரஷ்யா கூறுகிறது.

இதைதொடர்ந்து உக்ரைனின் இந்த நான்கு பிராந்தியங்களையும் ரஷ்யாவுடன் இணைத்துக் கொள்வது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பை ரஷ்ய அதிபர் புடின் நாளை (வெள்ளிக்கிழமை) வெளியிடுவார் என தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொழில் பயிற்சி வகுப்புகள் என்ற பெயரில் சீனா உலகம் முழுவதும் சட்டவிரோத காவல் மையங்கள்




பெய்ஜிங், செப்.29

கனடா மற்றும் அயர் லாந்து உள்ளிட்ட வளர்ந்த நாடுகள் உட்பட உலகெங் கிலும் ஏராள மான சட்டவிரோ தக் காவல் நிலையங்களை சீன அரசாங்கம் திறந்துள்ளதா கவும், இது மனித உரிமை ஆர்வலர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதா கவும் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

கனடா முழுவதும் பொது பாதுகாப்பு பணியகத்துடன் (PSB) இணைந்த இத்த கைய முறைசாரா பொலிஸ் சேவை நிலையங்கள் சீனாவின் எதிரிகளை பகைக்க அமைக் கப்பட்டுள்ளன என்று அந்நாட்டு உள்ளூர் ஊடகங்களை மேற்கோள் காட்டி புலனாய்வு இதழியல் அறிக்கை தெரிவித்துள்ளது.

உள்ளூர் ஊடக அறிக்கைகளின்படி, கனடா முழுவதும் பொதுப் பாதுகாப்புபணியகத்துடன் (PSB) இணைந்த முறைசாரா பொலிஸ் சேவை நிலையங்களை ஃபுஜோ நிறுவியுள்ளது. இவற்றில் குறைந்தது மூன்று நிலையங்களாவது கிரேட்டர் டொராண்டோ பகுதியில் மட்டுமே அமைந் துள்ளன. மேலும், இந்த சட்டவிரோத காவல் நிலையங்கள் மூலம் சில நாடுகளில் நடைபெறும் தேர்தல்களில் சீன அரசும்செல்வாக்கு செலுத்து கிறது என்று புலனாய்வுப் பத்திரிகை அறிக்கை தகவல் வெளியிட்டுள்ளது.

21நாடுகளில் இதுபோன்ற 30 நிலையங்களை ஏற்கனவே திறந்துள்ளதாக ஃபுஜோ காவல்துறை கூறுகிறது. உக்ரைன், பிரான்ஸ், ஸ்பெயின், ஜேர்மனி மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் சீன காவல் நிலையங்களுக்கு இத்தகைய ஏற்பாடுகள் உள்ளன. மேலும் இந்த நாடுகளின் தலைவர்கள் சீனாவின் இத்தகையசெயற்பாடுகள் மற்றும் அதன் மோசமான மனித உரிமைகள் பதிவுகள் குறித்து பொது மேடைகளில் கேள்வி எழுப்புவதுடன், குற்றமும் சாட்டியுள்ளனர். இதில் மக்களைத் தடுப்பு முகாம்களில் அடைத்து வைப் பது, குடும்பங்களை வலுக்கட்டாயமாக பிரிப்பது மற்றும் கட்டாய கருத்தடை செய்வது உள்பட, மற்ற நாடுகளில் தன் நாட்டுக்கு எதிராக செயல் படுவோரை கண்டுபிடிக்கவுமே இந்த காவல் நிலையங்கள் உருவாக்கப்படுவதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

தொழில் பயிற்சி வகுப்புகள் என்ற பெயரில் சீனா ஆரம்பித்துள்ள இந்த நிலையங்களால், மனித உரிமை மீறல் செயல்கள் அதிகரிக்கும் என மனித உரிமி ஆர்வலர்கள் அச்சம் தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தடை செய்யப்பட்டுள்ள இஸ்லாமிய அமைப்புக்கு எதிராக இதுவரையில் 1,400 கிரிமினல் வழக்குகள்



புதுடெல்லி,செப்.29

இந்தியாவில் தற்போது தடை செய்யப் பட்டு உள்ள இஸ்லாமிய தீவிரப் போக்கு அமைப்பான 'பொப்புலர் பிரண்ட் ஒவ் இந்தியா' (பி.எவ்.ஐ.) மீது இந்தியா முழு வதும் 1400 க்கும் மேற்பட்ட இப்போது கிரிமினல் வழக்குகள் இப்போது பதிவு செய்யப்பட்டு உள்ளன.

டெல்லியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் சேவை அமைப் பாக 'பி.எவ்.ஐ.' என்று அழைக்கப்படுகிற இந்த அமைப்புத் தொடங்கப்பட்டது. ஆனால் இந்த அமைப்பு பயங்கரவாதச் செயல்களை அரங்கேற்ற நிதி உதவி அளித்து வருகிறது, வன் முறைக்குத் துணை போகி றது, மதக்கலவரத் தைத் தூண்டுகிறது என முறைப் பாடுகள் எழுந்தன.

இந்தப் புகார்களைத் தொடர்ந்து, தேசிய புல னாய்வு முகமை என்.ஐ.ஏ., கடந்த 22 ஆம் திகதி தமிழ் நாடு உள்ளிட்ட 15 மாநிலங்க ளில் பி.எவ்.ஐ. அமைப்பின் அலுவலகங்கள், அவற்றின் நிர்வாகிகளின் வீடுகளில் அதிரடி சோதனைகளை நடத்தியது. நூறுக்கும் மேற் பட்டோரைக் கைது செய்தது. இதைக் கண்டித்து கேரள மாநிலத்தில் மறுநாளில் (23 ஆம் திகதி) முழு அடைப்பு, பேரணி நடத்தப்பட்டதும். அதில் ஆங்காங்கே வன் முறைக்காட்சிகக்உம் நடந் தன. மேலும், நேற்று முன்தி னம் 2 ஆவது நாளாக உத்தரபிரதேசம், கர் நாடகா, குஜராத், மராட்டியம் உள்ளிட்ட 8 மாநிலங்களில், அந்தந்த மாநில பொலிஸ் சார்பில் அதிரடி சோதனைகள் நடத்தப்பட்டு, 150 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இந்தநிலையில், ஐ.எஸ். போன்ற உலகளாவிய பயங்கர வாத அமைப்புக ளுடன் பி.எவ்.ஐ. அமைப்பு தொடர்பில் உள்ளது என்று கூறி, அந்த அமைப்பை மத்திய அரசு நேற்று 5 ஆண்டு காலத்துக்கு அதிரடியாகத் தடை செய்தது. பி.எவ்.ஐ. அமைப்புடன் தொடர்புடையதா கக் கூறப்படுகிற 8 அமைப்புகள் மீதும் மத்திய அரசு தடை விதித்துள்ளது. பி. எவ்.ஐ. அமைப்பைத் தடை செய்வதற்கு உத்தரபிரதேசம், கர்நாடகா, குஜராத் ப ாநில அரசுகள் பரிந் துரை செய்தன என மத்திய உள்துறை அமைச்சகம் கூறுகி றது. பி.எவ்.ஐ. அமைப்பையும், அதன் துணை அமைப்பு களையும் மத்திய அரசு தடை செய்துள்ள நிலையில் பல்வேறு இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள் ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த பி.எவ்.ஐ.அமைப்பின் தலைவர் ஓ.எம்.ஏ.சலாம், பொதுச்செயலாளர் அனிஸ் அகமது, தேசிய செயற்குழு உறுப்பினர் பி.கோயா, துணைத்தலை வர் இ.எம்.அப்துர் ரகுமான், செயலாளர் அப்துல் வாகித் சேட் உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டு விட்டனர். தடை செய்யப்பட்டு உள்ள பி.எவ்.ஐ. மீது நாடு முழுவதும் 1400 க்கும் மேற்பட்ட கிரிமினல் வழக்குகள் இப்போது பதிவு செய்யப்பட்டு உள்ளன.

## உலகின் 'நோபல்' பரிசு போன்று இந்தியாவில் 'விஞ்ஞான் ரத்னா'!

### மத்திய அரசு ஆராய்கின்றது

புதுடெல்லி,செப்.28

இந்தியாவில் வழங்கப்படும் ஒட்டுமொத்த விருதுகளையும் மாற்றி அமைக்குமாறு பிரதமர் மோடி சமீபத்தில் வலியுறுத்தினார்.

விருதுக்குரியோரை தேர்வு செய்யும் பணியில் வெளிப்படைத் தன்மையை உருவாக்குவதன் மூலம், விருது மீது நம்பகத்தன்மை யை ஏற்படுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டார். இந்த பின்னணியில், 8 விதமான அறிவியல் மற்றும் சுகாதாரத்துறை களின் செயலாளர்களுடன் மத்திய உள்துறை செயலாளர் அஜய் பல்லா ஆலோசனை நடத்தினார். அப்போது, தற்போது வழங் கப்பட்டு வரும் 300க்கு மேற்பட்ட விருதுகளை குறைத்துக்கொள் ளுமாறு கேட்டுக்கொண்டார். குறிப்பாக, தனி நன்கொடை விரு துகள், பெல்லோஷிப் மற்றும் உள்விருதுகளை நிறுத்திக்கொள்ளு மாறு கூறினார்.

சுகாதாரத்துறை சார்பில் ஆண்டுதோறும் 51 நரஸுகளுக்கு பிளாரன்ஸ் நைட்டிங்கேல் விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்த எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ளுமாறு அஜய் பல்லா வலியுறுத்தினார். தேசிய மருத்துவ கவுன்ஸில் வழங்கி வரும் பி.சி.ராய் விருது உள்ளிட்ட 3 விருதுகளை மறுசீரமைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அதிக மதிப்பு கொண்ட புதிய விருது ஒன்றை உருவாக்குமாறு கூறினார். அதுபோல், தகுதிவாய்ந்த விஞ்ஞானிகளுக்கு 'நோபல்' பரிசு போன்று 'விஞ்ஞான் ரத்னா' என்ற புதிய விருதை உருவாக்கி வழங்குமாறும், இதுதொடர்பாக மத்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகருடன் ஆலோசனை நடத்துமாறும் அஜய் பல்லா கூறினார். அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி கவுன்சில் (சி.எஸ்.ஐ.ஆர்.) வழங்கும் சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருதுகளை தொடர்ந்து வழங்குமாறு கேட்டுக்கொண்டார். 37 விருதுகளை ரத்து செய்யுமாறு சுகாதார ஆராய்ச்சி துறையை அஜய் பல்லா அறிவுறுத்தினார். தற்போதைய விருதுகளை ரத்து செய்துவிட்டு, அதிக அந்தஸ்து கொண்ட புதிய விருதுகளை உருவாக்குமாறு புவியியல் அமைச்சகம், விண்வெளி துறை, அணுசக்தி துறை ஆகியவற்றுக்கு யோசனை தெரிவித்தார்.

## வாலிபர் வயிற்றிலிருந்து 62 கரண்டிகள் அகற்றம்

### உத்தரப் பிரதேசத்தில் சம்பவம்

லக்னோ,செப்.29

உத்தரப்பிரதேச மாநிலம் முசாபர் பகுதி யை சேர்ந்த 32 வயது வாலிபர் ஒருவருக்கு அடிக்கடி வயிற்று வலி ஏற்பட்டு வந்தது. சம் பவத்தன்று அவருக்கு தீராத வயிற்று வலி ஏற்பட்டது. மருந்துகள் சாப்பிட்டும் வயிற்று வலி கொஞ்சம் கூட குறையாததால் அவர் அங்குள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்.



அவருக்கு டாக்டர்கள் வயிற்றில் ஸ்கான் எடுத்துப் பார்த்தனர். அப்போது அவரது வயிறு மற்றும் குடல் பகுதியில் ஏராளமான ஸ்பூன்கள்(கரண்டிகள்) காணப்பட்டன. அந்த ஸ்பூன்களில் தலை, கைபிடிக்கும் பகுதிகள் ம ட்டுமே காணப்பட்டன. இதையடுத்து அந்த வாலிபருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு அவரது வயிற்றில் இருந்த ஸ்பூன்கள் அகற் றப்பட்டன. மொத்தம் 62 ஸ்பூன்கள் அகற் றப்பட்டன. தற்போது அவர் தீவிர சிகிச்சை பிரி வில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரு கிறார்.

அவர் டாக்டர்களிடம் கூறும்போது, 'எனக்கு பசிக்கும்நேரங்களில்உணவுகிடைக்காவிட்டால் ஸ்பூன்களை சாப்பிடுவதை வழக்கமாக கொண்டிருந்தேன். இதனால் எனது பசி தீர்ந்தது. ஆனால் ஒரு கட்டத்தில் வயிறு வலிக் கத் தொடங்கிவிட்டது' என்றார்.

## சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல்:

## இன்ஸ்பெக்டர் உட்பட 13 பேருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை!

### எட்டு உறவினர்களுக்கு வாழ்நாள் சிறை



சென்னையில் 15 வயது சிறுமிக்கு பாலி யல் துன்புறுத்தல் அளித்த வழக்கில் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட 13 பேருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனையும், சிறுமியின் உறவினர்கள் 8 பேருக்கு வாழ்நாள் சிறை தண்டனையும் விதித்து சென்னை போக்சோ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சென்னை வண்ணாரப்பேட்டையை சேர்ந்த 15 வயது சிறுமி தனக்கு நடந்த தொடர் பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து வண்ணாரப்பேட்டை மகளிர் காவல் நிலையத்தில் கடந்த 2020 ஆம் ஆண்டு புகார் கொடுத்தார்.

இதையடுத்து, சிறுமிக்கு பாலியல் ரீதியாக துன்புறுத்தல் அளித்தனர் எனவும், அதற்கு உடந்தையாக இருந்தனர் எனவும் மதன்குமார், சாயிதாபானு, சந்தியா, செல்வி, கார்த்திக், மகேஸ்வரி, வனிதா, விஜயா, அனிதா என்ற கஸ்தூரி, மாரி, பாா, முத்துபாண்டி, மீனா, ராஜேந்திரன், பொலிஸ் இன்ஸ்பெக்டர் புகழேந்தி, காமேஸ்வர ராவ், முகமது அசாருதீன், பசுலுதீன், வினோபாஜி, கிரிதரன், ராஜாசுந்தர், மாரீஸ் வரன், நாகராஜ், பொன்ராஜ், வெங்கட்ராம் என்ற அஜய், கண்ணன் ஆகிய 26 பே மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர். இதில் மாரி, பாா, முத்துபாண்டி, மீனா ஆகியோர் தலைமறைவாக உள்ளனர். விசாரணை காலத்தில் மாரீஸ்வரன் உயிரிழந்துவிட்டார்.

மற்ற 21 பேர் மீதான வழக்கு விசாரணை, சென்னை போக்சோ சிறப்பு நீதிமன் றத்தில் நீதிபதி எம்.ராஜலட்சுமி முன்பு நடந்தது. அரசு தரப்பில் சிறப்பு வழக்கறிஞர் டி.ஜி. கவிதா ஆஜராகி வாதிட்டார். குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் பல வழக்கறிஞர்கள் ஆஜராகி வாதிட்டனர். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, "இந்த வழக்கில் அரசுத் தரப்பில் குற்றச்சாட்டு சரிவர நிரூபிக்கப்பட்டுள்ளது. குற்றம்சாட்டப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் புகழேந்தி, 7 பெண்கள் உட்பட 21 பேரும் குற்றவாளிகள்" என்று கடந்த 15 ஆம் திகதி தீர்ப்பளித்தார்.

இந்நிலையில், இந்த வழக்கில் தண்டனை விவரங்களை நீதிபதி நேற்று அறிவித்தார். இதற்காக, சிறையில் அடைக்கப்பட்டிருந்த 21 பேரும் பலத்த பாது காப்புடன் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டனர்.

# நிந்தவூரில் மிக மோசமான கடலரிப்பு திணைக்களப் பணிப்பாளர் கள ஆய்வு



(நூருள் ஹுதா உமர்)

நிந்தவூர் பிரதேச சபை உப தவிசாளர் வை எல் சுலைமாலெப்பையின் அழைப்பினையேற்று, கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ஆர்.ஏ.எஸ். ரணவக்க, நேற்று நிந்தவூர் பிரதேசத்திற்கு விஜயம் செய்தார்

நிந்தவூர் பிரதேசத்தில் அண்மைக்காலமாக நிலவி வரும் தொடர் கடலரிப்பின் மூலமாக ஏற்பட்டுள்ள சேதங்களை நேரில் பார்வையிட்ட அவர் எதிர்காலத்தில் கடலரிப்பைத் தடுப்பதற்கான தடுப்புச் சுவரினை அமைக் கும் நிரந்தர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதிபடத் தெரிவித்தார்.

இலங்கையில் எந்த ஊரிலும் ஏற்படாத கடலரிப் பினை, நிந்தவூரில் தான் கண்டுகொண்டுள்ளதாக தெரிவித்த அவர், நிரந்தர தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் விரைவில் செய்வார் எனத் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம் தாஹிர், உப தவிசாளர் வை எல் சுலைமாலெப்பை, பிரதேச சபை உறுப்பினர்களான எம் எம் எம் . அன்சார், சட்டத்தரணி ரியாஸ் ஆதம், ஏ.அஸ்வர், கே.எம். ஜாரிஸ், எம் மஜீத், ஏ எம் வாஹிட், மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களுக்கான கலையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் பிராந்தி பொறியியலாளர் எம்.துளசிதாசன், நிந்தவூர் எமரெல் விளையாட்டு கழகத்தின் தலைவரும், சமூகவியலாள மான எம் சி எம். றிபாய் மற்றும் மீனவர்களான மஜீத் நிசார் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து நிந்தவூர் பிரதேச சபையின் உ தவிசாளர் வை எல் சுலைமாலெப்பை கருத்து தெரிவிக்கையில் ''நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள் கடல் அரிப்பினைத் தடுப்பதற்கான இறுதி கட் நடவடிக்கைகள் யாவும் வெற்றி அடைந்துள்ளது. ந லது நடக்க இறைவனை பிரார்த்திப்போம்.'' – என குறிப்பிட்டுள்ளார்.

# சிறுவர் உரிமை கண்காணிப்புக் குழு இறக்காமம் பிரதேசத்தில் கூடி ஆய்வு





(நூறுல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச சிறுவர்களின் உரிமை, பாதுகாப்பு, அபிவிருத்தி, சிறுவர் நலன் மற்றும் மேம்பாடு என்பவற்றை ஆராய்கின்ற பிரதேச சிறுவர் உரிமை கண்காணிப்புக் குழுக் கூட்டம் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ். சபறுல் ஹஸீனாவின் ஒருங்கிணைப்பில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் பிரதேச செயலக கேட் போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பிரதேச சிறுவர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில், பாடசாலை இடை விலகல், கல்வி ரீதி யான பிரச்சினைகள், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு, பிரத்தியேக கல்வி நடவடிக்கைகள், சிறுவர்களை மையப்படுத்திய போதைப் பாவனை, இளவயது திருமணம், சிறுவர்களின் சுகாதார மேம்பாடு, விடே தேவையுடைய சிறுவர்களின் நலனோம்பல் மற்றும் கிராம மட்ட சிறுவர் அபிவிருத்தி குழு மற்றும் முன்பள்ளிகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மேலும் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு சார்பாக கலந்துகொண்ட திட்டமிடல் உத்தி யோகத்தரினால் பால்நிலை வன்முறை தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார், கிராமசேவை நிருவாக உத்தியோகத்தர் எச்.பி. யசரட்ன பண்டார, இறக்காமம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதி காரி, இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி, கிராம உத்தியோகத்தர்கள், இறக்காமம் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அதிபர்கள், சமய நிறுவன தலைவர்கள், மகளிர் அமைப் புக்களின் பிரதிநிதிகள் உட்பட பிரதேச செயலக கள உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.







# தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கல்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் பல வருட காலமாக குடியிருப்புக் காணிக்கான அனுமதிப்பத்திரமின்றி வாழ்ந்து வந்த நிலையில் அதனைப் பெற விண்ணப்பித்தோர்களுக்கான காணி பத்திரங்கள் நேற்று மாலை பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் 74 அனுமதிப் பத்திரங்களும், 30 உறுதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டன. மக்களுக்கான தேவையறிந்த காணி பத்திரங்களுக்காக விண்ணப்பித்தவர்ளுக்கு காணிக் கிளை மூலமான இச் சேவை துரிதமாக இடம் பெற்று வருகின்றது.

இதில் மாகாணக் காணி ஆணையாளர் டி.எம்.ஆர்.சி.தசநாயக்க, மாகாண காணி உதவி ஆணையாளர் ஜீ.ரவிராஜன், உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், நிருவாக உத்தியோகத்தர் உடகெதர பிரதம முகாமைத்துவ உதவியாளர் மஹிந்த வனசிங்க மற்றும் காணிக் கிளை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# யாழ்.வைத்தீஸ்வரக் கல்லூரியில் புதிய கட்டடத் தொகுதி திறப்பு!







(கலையமுதன்)

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரியில் புதிய வகுப்பறைக் கட்டிடத் தொகுதி இன்றைய தினம் திறந்துவைக்கப்பட்டது.

அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும்தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதியை இன்று காலை 9 மணியளவில் கடற்றொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

பாடசாலை அதிபர் வாசுகி தவபாலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், யாழ்ப்பாண வலயக் கல்வி பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தனிமையில் வசித்த பெண் மீது தொல்புரம் பகுதியில் தாக்குதல்!

யாழ்ப்பாணம் தொல்புரம் பகுதியில் தனிமையில் வசித்த பெண்ணொருவரை வீட்டினுள் அத்துமீறி நுழைந்த இருவர் தாக்கினர் எனவும், பெண்ணின் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர் எனவும் வட்டுக்கோட்டை பொலிஸாரின் விசாரணையின் போது, பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பெண், வீட்டில் தனிமையில் வசித்து வரும் நிலையில் செவ்வாய்க்கிழமை அதிகாலை இருவர் வீட்டின் வளாகத்தினுள் பொருத்தப்பட்டு இருந்த சிசிரிவி கமெராக்களை உடைத்து சேதப்படுத்திய பின்னர், வீட்டின் பிரதான கதவைச் சேதப்படுத்தி வீட்டினுள் அத்து மீறி நுழைந்து பெண் மீது தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து , சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த போது , நகைகளும் கொள்ளையடித்து செல்லப் பட்டுள் என என பொலிஸாரிடம் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதேவேளை முதல் கட்ட விசாரணைகளின் அடிப்படையில், இரு குடும்பங்களுக்கு இடையிலான தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே பெண்ணின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக பொலிஸ் தரப்பு தெரிவிக்கிறது.

# 'கிராமத்துக்கு தகவல் சட்டம்' தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் செயலமர்வு!







(கலையமுதன்)

வெகுஜன ஊடக அமைச்சின் ஏற்பாட்டில் கிராமத்துக்கு தகவல் சட்டம் என்னும் தொனிப்பொருளில் யாழ்.மாவட்ட செயலகத்தில் இன்று (வியாழக்கிழமை) காலை செயலமர்வு ஒன்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் தகவல் அறியும் ஆணைக்குழுவுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தமையோடு, யாழ்.மாவட்ட அரச அதிபர் க மகேசன், யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை பேராசிரியர் எஸ்.ரகுராம், தகவல் அறியும் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.ரீ உபாலி அபேரத்தன , தகவல் அறியும் ஆணைக்குழுவின் ஆணையாளர்ளான, கிசாலி பின்ரோ ஜெயவர்தன,ஜெகத் லியோன் ஆராய்ச்சி சமூக மட்ட அமைப்புக்களின் பிரதி நிதிகள் மாவட்ட பிரதேச செயலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தகவல் அறியும் சட்டம் தொடர்பாக கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

# கிழக்குப் பல்கலையில் சர்வதேச ஆய்வரங்கம்









(க.கிருபாகரன்)

கிழக்குப்பல்கலைக்கழகத்தின் சுவாமிவிபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக சர்வதேச ஆய்வு மாநாடு நேற்று நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் இராஜதுரை அரங்கில் நடைபெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல வாத்திய இசையோடு அதிதிகள் வரவேற்கப்பட்டு, சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றப்பட்டு, விபுலானந்தர் பாடல், வரவேற்பு நடனம், அதிதிகள் உரைகள், கலை நிகழ்வுகள் அரங்கேறின.

இந்த ஆய்வு மாநாடு 'மாறிவரும் உலகின் தொழில்நுட்ப சவால்களை எதிர்கொள்ளலும், இனக்குழு சமூகத்தின் கலை, பண்பாட்டுப் பெறுமானங்களை அடையாளப்படுத்தலும்' என்பதை மைய கருப்பொருளாகக் கொண்டு நடைபெற்றது.

ஆய்வு மாநாட்டில் தமிழகப் பேராசிரியர்களான அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ரி.அருட்செல்வி, பாண்டிச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவகத்தின் மானிடவியல் துறையின் ஓய்வு நிலை பேராசிரியர் கலாநிதி எஸ்.பக்தவத்சல பாரதி ஆகியோர் ஆதார சுருதி உரைகளை நிகழ்த்தினர்.

ஆய்வு மாநாட்டில் பிரதம விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல்துறை சிரேஷ்ட பேராசிரியரும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பேரவை உறுப்பினருமான பேராசிரியர் பிறேமகுமார டி சில்வாவும், கௌரவ விருந்தினராக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கமும் கலந்து சிறப்பித்தனர்.

அதிதிகளாகக் கலந்து கொண்டோர் நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.09.2022இல் வெளியிடப்பெற்றது.